இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

பாராளுமன்றம்

# 1987 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, பிரிவிடல் (திருத்தச்) சட்டம்

*[1987, ஜனவரி மாதம் 30 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

*1987, ஜனவரி மாதம் 30 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 30 தபாற் செலவு : சதம் 75

**1987 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, பிரிவிடல் ( திருத்தச் ) சட்டம்**

[1987, ஜனவரி மாதம் 30 ஆம் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ. ஓ. 50/85

## 1977 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பிரிவிடற் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினுல் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டமானது 1987 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க பிரிவிடற் (திருத்தச்) சட்டமென எடுத்துக்காட்டப்படலாம்.

1977 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கச் சட்டத்தின் 73 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

2. ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தேழாம் ஆண்டின் 21 ஆம் இலக்கப் பிரிவிடற் சட்டத்தின் 73 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப்பதிலாகப் பின்வரும் பிரிவானது இடப்படுகின்றது :—

" நில அளவை யாளர்கள் பற்றிய நிரல்.

73. (1) பிரிவிடல் வழக்கொன்றை விளங்குவதற்கு நியாயாதிக்கங்கொண்ட ஒவ்வொரு நீதிமன்றமும், அத்தகைய நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் வதிகின்றவர்களும் அல்லது தொழில் கொண்டு நடாத்துகின்றவர்களும் இச்சட்டத்தின்கீழ் ஆணைகள் வழங்கப்படக்கூடியவர்களுமான நில அளவையாளர்கள் பற்றிய நிரலொன்றைக் காலத்துக்காலம் தயாரித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் தயாரிக்கப்படும் நிரலில், நில அளவையாளரொருவரின் பெயரை சேர்த்துக் கொள்வதற்கு முன்னர், அத்தகைய நில அளவையாளர், நீதிமன்றத்தால் வழங்கப்படும் ஆணைகளைப் பொறுப்பேற்பதற்கு, கிரமமாகக் கிடைக்கத்தக்கதாக விருப்பாரா என்பதை நிச்சயித்துக்கொள்வதற்கு அவசியமாகக்கூடியவாறுன அத்தகைய விசாரணைகளை நீதிமன்றமானது நடாத்துதல் வேண்டும்.",

ජ 092864—2,810 (86/09)

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் நவம்பர் மாதம் 30 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.